மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருநெல்வேலி மாவட்டத்தில் போதிய இடவசதியுடன் கிளைச் சிறைகள் தேவையான எண்ணிக்கையில் இயங்கி வருகின்ற காரணத்தால் சிவகிரி தாலுக்காவில் புதிதாக கிளைச் சிறைச்சாலை எதுவும் ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. மேலும், இது தொடர்பாக அரசிடம் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்ந்த மக்களும், சுற்று வட்டார பொதுமக்களும், நீண்ட பல வருடங்களாக இந்தக் கிளைச் சிறைச்சாலை தொடங்க வேண்டுமென்று கோரி அரசுக்கு பல விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே பக்கத்திலுள்ள சிறைச்சாலைக்கு நீண்ட தொலைவு செல்ல வேண்டி இருப்பதால், சிவகிரியில் கிளைச் சிறைச்சாலை அமைக்க வேண்டுமென்று கோரிக்கை இருப்பதால் அரசு இதனை மீண்டும் கனிவோடு பரிசீலித்து ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மத்திய சிறைச்சாலை பாளையங்கோட்டையிலும், மற்றும் கொக்கிரக்குளம், நாங்குநேரி, அம்பாசமுத்திரம், தென்காசி மற்றும் சங்கரன்கோயில் ஆகிய இடங்களில் கிளைச் சிறைச்சாலைகளும் உள்ளன. அங்கே ஏறத்தாழ 1347 சிறைவாசிகளுக்கு தேவையான வசதிகள் இருக்கின்றன. எனவே, புதிதாக சிவகிரியில் கிளைச் சிறைச்சாலை அமைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 162, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு சட்ட அமைச்சர்.

162—

ஈரோடு சிறைச்சாலை இடமாற்றம்

**48832—திருமதி கவிநிலவு தர்மராஜ்:*

மாண்புமிகு சட்ட அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

1996 மார்ச் 1]

ஈரோடு சிறைச்சாலையை வேறு இடத்திற்கு மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி, சட்ட அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திருமதி கவிநிலவு தர்மராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டில் நடுநாயகமாக விளங்கிக் கொண்டிருக்கிற ஈரோடு ஒன்றிய அலுவலகமும், ஈரோட்டைச் சேர்ந்த உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் மற்றும் பள்ளிகள் ஒருங்கே சூழப்பட்டுள்ள அந்த இடத்திலேயே ஈரோடு கிளைச் சிறைச்சாலை இருக்கிற காரணத்தால், சிறைக் கைதிகளை பார்க்க வருபவர்கள் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக உள்ளார்கள். மேலும், அந்தச் சிறைச்சாலையைப் பொறுத்தவரை அதிகப்படியான அறைகள் ஏதுமின்றி மிகவும் நெருக்கடியாகவும், அதன் அருகிலேயே, அந்தச் சிறைச்சாலை சுவரையொட்டியே தாலுக்கா அலுவலகத்தினுடைய அறைகளும், அலுவலகங்களும் இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஈரோடு வளர்ந்து வருகிற ஒரு பெரிய நகரமாக இருக்கிற காரணத்தாலும், பெரியார் மாவட்டத்தினுடைய தலைநகராக விளங்கிக் கொண்டிருக்கிறபடியாலும் அந்தச் சிறைச்சாலையை வேறு இடத்திற்கு, ஈரோட்டை விட்டு சற்று தள்ளி, நகரத்திலிருந்து சற்று தள்ளி, இரண்டு கிலோமீட்டர், மூன்று கிலோமீட்டர் நகரத்திலேயிருந்து தள்ளி மாற்றி அமைப்பதற்கு அரசு மீண்டும் பரிசீலிக்குமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோட்டிலே இருப்பது 'சப்-ஜெயில்'. அங்கே அடைக்கப்படுகின்ற கைதிகள் 'ரிமேன்டு' கைதிகள். அவர்கள் தண்டிக்கப்பட்டால் அருகிலேயிருக்கிற கோவை சென்டிரல் ஜெயில், பக்கத்திலேயிருக்கிற சேலம் சென்டிரல் ஜெயில் ஆகியவற்றில் கொண்டுபோய் அமர்த்தப்படுவார்கள். எனவே ஈரோடு நகரத்திலுள்ள சிறைச்சாலையை மாற்ற வேண்டிய அவசியம் ஏதுமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 163, திருமதி கே. மரியம் உல் ஆசியா, மாண்புமிகு சட்ட அமைச்சர்.